பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

04 11 2025 6 45

செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தப் பணிகள் மாநிலம் முழுவதும் இன்று தொடங்குகிறது.

2. நடப்பாண்டுக்கான காரீப் சாகுபடி பருவதில் நாடு முழுவதும் விவசாயிகளுக்கு போதுமான அளவு யூரியா கிடைப்பது உறுதி செய்யப்பட்டதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

3. கடந்த 2 மாதங்களில் மாநிலத்தில் ஒரு லட்சத்து 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

4. கோவையில் கல்லூரி மாணவி கூட்டுப் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட சம்பவத்திற்கு இடதுசாரி கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

5. இந்தியாவில் ஹாக்கி விளையாட்டு தொடங்கி நூறு ஆண்டுகள் நிறைவு பெறுவதை முன்னிட்டு நாடு முழுவதும் பிரம்மாண்ட விழாவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

--- இனி விரிவான செய்திகள் ---

------------

தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தப் பணிகள் மாநிலம் முழுவதும் இன்று தொடங்குகிறது.

தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி நடைபெறும் இந்த திருத்தத்தின்போது வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வீடுதோறும் சென்று கணக்கெடுப்பு பணியை மேற்கொள்வார்கள்.

அடுத்த மாதம் 4ஆம் தேதி வரை நடைபெற உள்ள இந்தப் பணியின்போது வாக்குச்சாவடி நிலை அலுவலர் தரும் இரண்டு படிவங்களை வாக்காளர்கள் நிரப்பி தர வேண்டும்.

தேவைப்பட்டால் கணக்கெடுப்பு படிவத்தில் சமீபத்திய புகைப்படத்தையும் ஒட்டலாம்.

படிவத்தை நிரப்புவதில் ஏதேனும் உதவி தேவைப்பட்டால் வாக்குச்சாவடி நிலை அலுவலவரைத் தொடர்பு கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கணக்கெடுப்பின்போது வாக்காளரிடமிருந்து எந்தவொரு ஆவணமும் சேகரிக்கப்படாது என்று தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

கணக்கெடுப்பு படிவத்தை ECINET செயலி மூலம் நிரப்பியும் பதிவேற்றம் செய்யலாம்.

அல்லது voters.eci.gov.in என்ற இணையதளத்திற்குச் சென்று படிவத்தை பதிவிறக்கம் செய்து நிரப்பி பின்னர் ஆன்லைனில் பதிவேற்றம் செய்யலாம் என்றும் மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி அறிவித்துள்ளார்.

வரைவு வாக்காளர் பட்டியல் அடுத்த மாதம் 9ஆம் தேதி வெளியிடப்படும்.

வாக்காளர் பட்டியலில் பெயர்களை சேர்க்க மற்றும் நீக்குவதற்கு அடுத்த மாதம் 9ஆம் தேதி முதல் ஜனவரி மாதம் 8ஆம் தேதி வரை விண்ணப்பம் செய்யலாம்.

இறுதி வாக்காளர் பட்டியல் பிப்ரவரி மாதம் 7ஆம் தேதி வெளியிடப்பட உள்ளது.

------------

நடப்பாண்டுக்கான காரீப் சாகுபடி பருவதில் நாடு முழுவதும் விவசாயிகளுக்கு போதுமான அளவு யூரியா கிடைப்பதை மத்திய அரசு உறுதி செய்துள்ளது.

ரயில்வே, துறைமுகங்கள், மாநில அரசுகள், உர நிறுவனங்கள் ஆகியவற்றுடன் மத்திய அரசு மேற்கொண்ட சிறப்பான திட்டமிடல் மூலம் இது சாத்தியமாகியுள்ளது.

வேளாண்துறையின் தேவை 185 புள்ளி மூன்று ஒன்பது லட்சம் மெட்ரிக் டன்னாக இருந்த நிலையில் உரத்துறையால் 230 புள்ளி ஐந்து மூன்று லட்சம் மெட்ரிக் டன் யூரியா கிடைப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இது வழக்கமான யூரியா விற்பனையை விட 193 புள்ளி இரண்டு லட்சம் மெட்ரிக் டன் அதிகம் என்று மத்திய அரசு கூறியுள்ளது.

கடந்த ஆண்டு காரீப் பருவத்துடன் ஒப்பிடும்போது நடப்பாண்டு பருவத்தில் விவசாயிகள் அதிகமாக 4 புள்ளி 8 லட்சம் மெட்ரிக் டன் யூரியாவை பயன்படுத்தியுள்ளனர்.

------------

கடந்த 2 மாதங்களில் மாநிலத்தில் ஒரு லட்சத்து 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளதாக துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

வேலூர் மாவட்டத்தில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்து நேற்று மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் பேசிய அவர், மகளிர் உரிமைத் தொகை திட்டத்தில் தகுதியானவர்கள் ஒருவர்கூட விடுபடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று கூறினார்.

அடிப்படைத் தேவைகள் தொடர்பாக பொதுமக்கள் அளிக்கும் மனுக்கள் மீது அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று திரு. உதயநிதி ஸ்டாலின் கேட்டுக்கொண்டார்.

------------

தமிழகத்தில் திமுக தலைமையிலான கூட்டணி கட்டுக்கோப்பாக இருப்பதாக திமுக முதன்மைச் செயலர் திரு. கே.என். நேரு தெரிவித்துள்ளார்.

திருவாரூரில் நேற்று நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், திமுக கூட்டணியில் உள்ள கட்சிகள் கூட்டணியில் இருந்து வெளியேறிவிடும் என்ற எதிர்க்கட்சிகளின் எண்ணம் நிறைவேறவில்லை என்று கூறினார்.

அஇஅதிமுக கூட்டணியில் இருந்துதான் பல கட்சிகள் வெளியேறி இருப்பதாகவும், அஇஅதிமுகவே பல பிரிவுகளாக பிரிந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

------------

விசைத்தறிக்கு இலவச மின்சாரம் வழங்குவதாக அளித்த தேர்தல் வாக்குறுதியை திமுக அரசு நிறைவேற்றவில்லை என்று பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

ஈரோட்டில் நேற்று நடைபெற்ற பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் பேசிய அக்கட்சியின் மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன், நலிவடைந்த விசைத்தறியைப் பாதுகாக்கவும் நடவடிக்கை எடுக்கவில்லை என்று கூறினார்.

கடந்த நான்கரை ஆண்டுகால ஆட்சியில் சொத்துவரி, பால் விலை, மின் கட்டணம் உயர்த்தப்பட்டதால் சாமானிய மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

------------

கோவையில் கல்லூரி மாணவி கூட்டுப் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட சம்பவத்திற்கு இடதுசாரி கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

இதுகுறித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் திரு. பெ. சண்முகம் விடுத்துள்ள அறிக்கையில், இந்த கொடிய குற்றத்தைச் செய்த நபர்களை உடனடியாக கைது செய்து சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

பெண்களுக்கு எதிரான குற்றங்கள் மாநிலத்தில் தொடர்ந்து நடைபெறுவது கவலையளிப்பதாகவும், அதைத் தடுத்து நிறுத்த காவல்துறை கண்காணிப்பை தீவிரப்படுத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் திரு. மு. வீரபாண்டியன் விடுத்துள்ள அறிக்கையில், போதைப்பொருட்கள் தாராளமாக கிடைப்பதால் இதுபோன்ற குற்றங்கள் அதிகரித்துள்ளதாக கூறியுள்ளார்.

பாதிக்கப்பட்ட பெண்ணிற்கும், அவரது நண்பருக்கும் தேவையான மருத்துவ சிகிச்சைகளை மாநில அரசு வழங்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

------------

கரூர் கூட்ட நெரிசல் சம்பவம் தொடர்பாக மத்திய புலனாய்வுத்துறை அதிகாரிகள் தொடர்ந்து மூன்றாவது நாளாக நேற்று விசாரணை நடத்தினர்.

நெரிசல் சம்பவம் நிகழ்ந்த கரூர் வேலுச்சாமிபுரம் பகுதியில் உள்ள கடைகளின் உரிமையாளர்கள் ஏழு பேரிடம் விசாரணை நடத்தினர்.

முன்னதாக இந்த சம்பவம் தொடர்பாக சாட்சிகளிடம் விசாரணை நடத்த நூற்றுக்கும் மேற்பட்டோருக்கு மத்திய புலனாய்வுத்துறை சம்மன் அனுப்பியிருந்தது.

------------

நீலகிரியில் பனிப்பொழிவு தொடங்கியுள்ளதால் கடும் குளிரால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

சில இடங்களில் இந்த ஆண்டு வழக்கத்தைவிட அதிக பனி நிலவுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

------------

*இருவரிச் செய்திகள்*

உள்நாட்டுப் போர் தீவிரமடைந்துள்ள சூடானில் இருந்து இந்தியர்கள் பாதுகாப்பாக தாயகம் திரும்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்று இந்தியாவுக்கான சூடான் தூதர் முகமது அப்துல்லா அலி தெரிவித்துள்ளார்.

------------

பருவநிலை தொடர்பான உலக நாடுகளின் உச்சிமாநாட்டில் பங்கேற்க மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சர் திரு. பூபேந்தர் யாதவ் பிரேசில் புறப்பட்டுச் சென்றுள்ளார்.

------------

கத்தார் தலைநகர் தோஹாவில் இன்று தொடங்க உள்ள சமூக வளர்ச்சிக்கான உலக உச்சிமாநாட்டில் மத்திய அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா தலைமையிலான இந்திய குழு பங்கேற்கிறது.

------------

மத்தியப்பிரதேச மாநிலம் இந்தூரில் நேற்றிரவு பேருந்து கவிழ்ந்ததில் 3 பேர் உயிரிழந்தனர். 20க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

------------

திருப்பத்தூர் மாவட்டத்தில் பொதுமக்கள் குறைதீர்க்கும் கூட்டத்தில் வழங்கப்பட்ட மனுக்கள் தகுதியானதாக இருப்பின் அதன்மீது உரிய நடவடிக்கை எடுக்க அதிகாரிகளுக்கு ஆட்சியர் திருமதி சிவசௌந்தரவல்லி உத்தரவிட்டுள்ளார்.

------------

அரசுத் தேர்வுகள் இயக்ககம் சார்பில் அடுத்த ஆண்டு நடைபெற உள்ள பிளஸ்-2 பொதுத்தேர்வுக்கான அட்டவணை இன்று வெளியிடப்படுகிறது.

------------

திருவண்ணாமலை மாவட்டம் ஜவ்வாது மலையில் ஆலய கட்டுமானப் பணியின்போது பழமைவாய்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட தங்கக் காசுகள் கண்டெடுக்கப்பட்டன.

------------

சென்னை கொளத்தூர் சட்டமன்ற தொகுதியில் கட்டப்பட்டு வரும் முதல்வர் படைப்பக கட்டிடத்தின் இறுதிக்கட்டப் பணிகளை அமைச்சர் திரு. பி.கே. சேகர்பாபு நேற்று நேரில் ஆய்வு செய்தார்.

------------

*விளையாட்டுச் செய்திகள்*

இந்தியாவில் ஹாக்கி விளையாட்டு தொடங்கி நூறு ஆண்டுகள் நிறைவு பெறுவதை முன்னிட்டு நாடு முழுவதும் பிரம்மாண்ட விழாவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதன் துவக்க விழா வரும் வெள்ளிக்கிழமை தில்லியில் உள்ள மேஜர் தயான்சந்த் தேசிய அரங்கில் நடைபெறும் என்று கூறினார்.

இதைத்தொடர்ந்து நாடு முழுவதும் 550 மாவட்டங்களில் இந்திய ஹாக்கியின் நூற்றாண்டு விழா நடைபெறும் என்றும், இதையொட்டி ஆயிரத்து 400 ஹாக்கிப் போட்டிகளுக்கு ஏற்பாடு செய்யப்படடுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த விழாக்களின்போது ஹாக்கி விளையாட்டுக்கு சிறப்பான பங்களிப்பை அளித்த வீரர்கள் மற்றும் பயிற்சியாளர்கள் கௌரவிக்கப்படுவார்கள் என்றும் அமைச்சர் கூறினார்.

---------------

சீன தைபேயில் நடைபெறும் சாலஞ்சர் கோப்பைக்கான டென்னிஸ் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் இந்தியாவின் Rawat - செக் குடியரசின் Vrvensky-யையும், சசிகுமார் - ஜப்பானின் Uchida-வையும் எதிர்கொள்கின்றனர்.

------------

தமிழகத்திற்கு எதிரான ரஞ்சிக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் விதர்பா அணி வலுவான நிலையில் உள்ளது.

<<<<The End>>>>